கல்வி அமைச்சின் சுற்று நிருப இலக்கம் :43/2019

எனது இலக்கம்: ED/4/58/04/58/01/05/93(iv)

கல்வி அமைச்சு,
"இசுருபாய"
பத்தரமுல்ல,
2019.10.16

சகல மாகாணசபை பிரதம செயலாளர்கள்,
மாகாண கல்விச் செயலாளர்கள்,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்.

**இலங்கை கல்வி நிர்வாக சேவைப்பிரமாணக் குறிப்பிற்கு இலக்கம் 2141/6 மற்றும் 2019.09.16 ஆந்திகதிய அதிவிஷேட வர்த்தமானி மூலம் சேர்க்கப்பட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்தல்**

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் மூன்றாம் (III) தரத்திலிருந்து இரண்டாம் (II) தரத்துக்கும் இரண்டாம் (II) தரத்திலிருந்து முதலாம் (I) தரத்துக்கும் பதவி உயர்த்தும் குறைந்தபட்ச சேவைக்காலத்தை திருத்தம் செய்யவதற்கு உரிய விதிகளை உள்ளடக்கி இலக்கம் 2141/6 மற்றும் 2019 செப்டம்பர் 16 ஆந்திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பின் இரண்டாவது சேவைப் பிரமாண திருத்தத்தின் பிரகாரம் தற்பொழுது சேவையிலுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களைத் தரமுயர்த்துதல் பின்வருமாறு மேற்கொள்ளப்படும்.

**01. மூன்றாம் (III) தரத்திலிருந்து இரண்டாம் (II) தரத்திற்கு பதவி உயர்த்துதல்**

1.1) 2019 பெப்ரவரி மாதம் 26 ஆந்திகதிக்கு முன்பு சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் திருத்தம் செய்யப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.1.1 இன் தொடர் இலக்கம் (V) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பான கொள்ளளவு விருத்திப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்யும் தேவை தவிர 10.1.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள திகதி அல்லது 2019 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதி ஆகிய இரண்டு தினங்களில் பின்னர் வருகின்ற திகதி தொடக்கம் II ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்படுவர்.

1.2) இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணத்தின் 10.1.1 இன் தொடர் இலக்கம் (III) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அரசகரும மொழித்தேர்ச்சியை பொதுநிர்வாக சுற்று நிருப இலக்கம் 01/2014 மற்றும் அதன் துணைச் சுற்றுநிருபத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள சலுகைக்காலத்தினுள் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள், குறித்த திகதிக்கு ஏனைய அரசகரும மொழித்தேர்ச்சியைப்பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களாகக் கணிக்கப்படுவர்.

1.3) இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணத்தின் 10.1.1 இன் தொடர் இலக்கம் (III) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அடுத்த அரசகரும மொழித்தேர்ச்சியை அரச சுற்று நிருபம் 01/2014 மற்றும் அதன் துணைச் சுற்றுநிருபத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள சலுகைக்காலத்தினுள் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் அடுத்த அரசகரும மொழித்தேர்ச்சி உட்பட இச்சுற்றுநிருபத்தின் 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்திசெய்கின்ற தினத்திலிருந்து II ஆம் தரத்துக்குப் பதவி உயர்த்தப்படுவர்.

1.4) கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.1.1 இன் தொடர் இலக்கம் (VI) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்பின் கல்வி டிப்ளோமா சித்தியடையும் தேவையைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தராக கருதப்படுவர்.

(அ) கல்வி மாணிப்பட்டம் பெற்றிருத்தல்.
(ஆ) பட்டப்பின் கல்வி டிப்ளோமாவொன்று பெற்றிருத்தல்.
(இ) கல்வி முகாமைத்துவம் அல்லது சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பாடத்திற்குறிய பட்டப்பின் டிப்ளோமாவொன்று அல்லது பட்டப்பின் பட்டமொன்றை பெற்றிருத்தல்.

குறிப்பு:- 01

I. இலக்கம் 1928/28 மற்றும் 2015.08.21 ஆந்திகதிய இலங்கை கல்வி நிர்வாக சேவையின் இடைக்காலத்தினுள், அல்லது அதற்கு முன்னர் இலக்கம் 1225/32 மற்றும் 2002.03.01 ஆந்திகதிய இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பழைய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இரண்டாம் மொழிப் பரீட்சையிலிருந்து விடுதலை பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.1.1 இன் தொடர் இலக்கம் (IV) இன் கீழான இணைப்புமொழித் தேவையினை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களாக கணிக்கப்படுவர்.

**02. இரண்டாம் (II) தரத்திலிருந்து முதலாம் (I) தரத்திற்கு பதவி உயர்த்துதல்**

2.1) சேவைப்பிரமாணத்தின் இரண்டாவது திருத்தம் அமுலாக்கப்படுகின்ற 2019 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதிக்கு II ஆந் தரத்தில் இருக்கின்ற உத்தியோகத்தர்களுக்கும் III ஆம் தரத்தில் ஆறு (06) வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு

(அ) II ஆம் தரத்திலிருந்து I ஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கு பெற்றிருக்க வேண்டிய 10.2.1 இன் தொடர் இலக்கம் VI இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்பின் தகைமையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக II ஆம் தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டு ஏழுவருட (07) சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்கின்ற திகதி அல்லது 2024.10.16 ஆம் திகதி ஆகிய இரு திகதிகளில் முதலாவது வருகின்ற திகதி வரை சலுகைக்காலமொன்று வழங்கப்படுவதோடு அச்சலுகைக் காலத்தினுள் பட்டப்பின்பட்ட தகைமையைப் பூர்த்தி செய்கின்ற உத்தியோகத்தர்கள் இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் 10.2.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற திகதி தொடக்கம் அமுலாகும் வகையில் I ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்படுவர்.

குறிப்பு:- 02

01.பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கமொன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து சேவைப் பிரமாணத்தின் 10.2.1 இன் குறிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடப்பரப்பின் கீழோ அல்லது நிர்வாக அல்லது முகாமைத்துவ பாடப்பரப்பின் கீழோ அல்லது சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பாடப்பரப்பிற்குரிய அல்லது கல்வித்துறையின் கீழோ பட்டப்பின் பட்டமொன்றைப் பெற்றிருப்பதன் மூலம் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.2.1 இன் (VI) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்பின்பட்ட தகைமையைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(ஆ) II ஆம் தரத்திலிருந்து I ஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கு பெற்றிருக்க வேண்டிய 10.2.1 இன் தொடர் இலக்கம் II இன் கீழான இரண்டாவது வினைத்திறன் தடைதான்டல் பரீட்சையைப்பூர்த்தி செய்வதற்காக II ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்ட திகதியில் இருந்து மூன்று (03) வருட சலுகைக் காலமொன்று

வழங்கப்படுவதோடு அச்சலுகைக்காலத்தினுள் உரிய தகைமைகளைக் பூர்த்தி செய்கின்ற உத்தியோகத்தர்கள் இந்த சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்படுகின்ற விதிகளின் பிரகாரம் 10.2.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள திகதி தொடக்கம் அமுலாகும் வகையில் I ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்படுவர்.

குறிப்பு:- 03

இலக்கம் 1225/32 மற்றும் 2002.03.01 ஆந்திகதிய முன்னைய கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் தகைமையைகளைப் பூர்த்தி செய்துள்ள, 2015.08.21 ஆந் திகதிக்கு முன் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.2.1 இன் தொடர் இலக்கம் II இன் கீழான இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களாக கருதப்படுவர்.

2.2) சேவைப் பிரமாணக் குறிப்பின் இரண்டாவது திருத்தம் அமுலாகும் 2019 பெப்ரவரி மாதம் 26 ஆந்திகதிக்கு II ஆம் தரத்தில் இருக்கும் உத்தியோகத்தர்களை I ஆந் தரத்திற்கு பதவி உயர்த்தும் போது 10.2.1 இன் I மற்றும் V இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்குப் பதிலாக பின்வரும் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

(அ) II தரங்களில் இரண்டு (02) வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் II ஆந் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்ட பின் இரண்டு (02) சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றிருத்தல்.

(ஆ) அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்தின் பிரகாரம் II ஆந் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்ட பின் பதவி உயர்த்தப்பட்ட திகதிக்கு முன்னுள்ள இரண்டு (02) வருடத்தினுள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேலான செயலாற்றுகையைக் காட்டியிருத்தல்.

2.3) சேவைப் பிரமாணக் குறிப்பின் இரண்டாவது திருத்தம் செல்லுபடியாகின்ற 2019 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதிக்கு III ஆந் தரத்தில் 06 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியானதும் மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இச்சுற்று நிருபத்தின் 1.1 இன் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் II ஆந் தரத்திற்கு பதவி உயர்த்தப்படுகின்ற உத்தியோகத்தர்களை I ஆந் தரத்திற்குப் பதவி உயர்த்தும் போது 10.2.1 இன் (I) மற்றும் (V) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்குப் பதிலாக பின்வரும் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

(அ) III மற்றும் II தரங்களில் பன்னிரண்டு வருடங்கள் (12) தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் சம்பள ஏற்றங்கள் பதினொன்றை (11) உழைத்துப் பெற்றிருத்தல்.

(ஆ) அனுமதிக்கப்பட்ட தரக்கணிப்பீட்டு மதிப்பீட்டுத் திட்டத்தின் பிரகாரம் பதவி உயர்த்தும் திகதிக்கு முன்னரான பன்னிரண்டு (12) வருடங்களினுள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேலான தரக்கணிப்பீட்டைக் காட்டியிருத்தல்.

குறிப்பு :- 04

2019 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதிக்கு முன் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆந் தரத்தில் ஆறு (06) வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியானதும் மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இச்சுற்று நிருபத்தின் 1.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் II ஆந் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களை I ஆந் தரத்திற்குப் பதவி உயர்த்தும் போது அவ்வுத்தியோகத்தர்கள் அடுத்த அரசகரும மொழித்தேர்ச்சியை பூர்த்தி செய்வதற்காக எடுக்கப்படுகின்ற மேலதிக காலத்திற்குச் சமமான

காலத்தினுள் அவ்வுத்தியோகத்தர்களின் I ஆந் தரத்திற்கான பதவி உயர்வு தாமதப்படுத்தப்படும்.

2.4) 2019 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதிக்கு முன் III ஆந் தரத்தில் ஆறு (06) வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியானதும் மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களை I ஆந் தரத்திற்குப் பதவி உயர்த்தும் போது இலங்கை கல்வி நிர்வாக சேவைப்பிரமாணத்தின் 10.2.1 இன் தொடர் இலக்கம் (III) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

இச்சுற்றுநிருபம் அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் வெளியிடப்படுகின்றது.

எம்.என்.ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.